
## கிராமப்புற ஏழை மாணவர்களுக்காக நம் கல்லூரியில் பயிற்றுவிக்கப்படும் குறுகிய கால

## இலவச தொழில் பயிற்சி வகுப்புகள்

1. ஃபிட்டர் – ஸ்டீல் பர்னிச்சர் பயிற்சி – 3 மாதம்
2. காங்கிரீட் கட்டுமான பயிற்சி – 4 மாதம்
3. கண்காணிப்பு கேமரா டெக்னீஷியன் பயிற்சி – 4 மாதம்
4. பல்பொருள் அங்காடி பராமரிப்பு பயிற்சி – 3 மாதம்
5. முதன்மை அலுவலக வரவேற்பாளர் பயிற்சி – 3 மாதம்
6. இளநிலை மென்பொருள் உருவாக்குனர் பயிற்சி – 4 மாதம்
7. பிளம்பர் பயிற்சி வகுப்புகள் – 4 மாதம்
8. எலக்ட்ரீஷன் பயிற்சி வகுப்புகள் – 4 மாதம்

☆☆☆☆☆



**என்றும் சமுதாயப்பணியில் ஏ.வி.சி கல்வி நிறுவனங்கள்**

Bhaarathi *Digital* Printerss, Mayiladuthurai. ☎ 220640

# A.V.C. COLLEGE

## (AUTONOMOUS)

NAAC Reaccredited 'A' Grade Institution
UGC Recognized "College with Potential for Excellence - Phase I & II"
NIRF All India Ranking 2018: College (Rank band: 101-150)

**MANNAMPANDAL, MAYILADUTHURAI - 609 305**

# PEKAK

## EXTENSION PROGRAMME

### HAND BOOK

# பீக்காக்

## விரிவாக்கப்பணி

### கையேடு

Name : ..............................................................

Roll. No. : ..............................................................

Class : ..............................................................

Department : ..............................................................

# A.V.C. COLLEGE (Autonomous)

Mannampandal, Mayiladuthurai - 609 305
Phone:04364 - 222264
Email: avccollegeauto@gmail.com Website:www.avccollege.net

## COURSES OFFERED

### DAY COLLEGE

| | |
|---|---|
| **B.A.** | - History, Economics & English |
| **B.Sc.** | - Mathematics, Physics, Chemistry, Computer Science, Botany & Zoology |
| **B.Com.** | |
| **M.A.** | - Economics |
| **M.Com.** | |
| **M.Sc.** | - Mathematics & Wildlife Biology |
| **M.Phil.** | - Economics, Commerce, Tamil, Zoology, Maths, Physics, Chemistry & Computer Science |
| **Ph.D.** | Zoology, Commerce, Economics, Chemistry, Tamil, Botany, History, Mathematics & Physics |

### EVENING SECTION

| | |
|---|---|
| **B.A.** | - Tamil & English |
| **B.Com. &** | |
| **B.B.A.** | |
| **B.Sc.** | - Mathematics, Physics, Chemistry, Computer Science, Electronic Science, Micro-Biology, Bio-Technology & Visual Communication |
| **B.C.A.** | |
| **M.A.** | - Tamil, English |
| **M.Sc.** | Computer Science, Chemistry, Botany, Zoology, Physics, Electronic, Science, Micro-Biology, Mathematics & Bio-Technology |
| **M.Com.** | |

# A.V.C. COLLEGE
(AUTONOMOUS)

NAAC Reaccredited 'A' Grade Institution
UGC Recognized "College with Potential for Excellence - Phase I & II"
NIRF All India Ranking 2018: College (Rank band: 101-150)
**MANNAMPANDAL, MAYILADUTHURAI - 609 305**

**P** - **Pallavarayenpet**

**E** - **Eanathimangalam**

**K** - **Karugudi**

**A** - **Anbanaathapuram**

**K** - **Kanganamputhur**

**கல்லூரியைத் தொடங்கிய முன்னோர்களின் ஊர்ப்பெயர்கள் நிலைக்கும் வண்ணம் அவ்வூர்களின் முதலெழுத்தைக் கொண்டே இந்த இயக்கத்திற்குப் பெயரிடப்பெற்றுச் செயல்படுத்தப்படுகின்றது.**

## வரலாறு

1838 ஆம் ஆண்டு தெய்வத்திரு இராமலிங்கம் பிள்ளை அவர்கள் சுமார் 9000 (ஒன்பதாயிரம்) ஏக்கர் நிலத்தினைத் தன்னுடைய 6 வாரிசுகளுக்குப் பாகப்பிரிவினை செய்து வைத்தார்.

இதில் **சிவத்திரு வேலாயுதம் பிள்ளை** அவர்களுக்கு வாரிசு இல்லாத காரணத்தினால் அவருடைய பாகமான 1500 ஏக்கர் நிலத்தினை அறக்கட்டளையாக எழுதிவைத்து ஐந்து குடும்பத்தாரும் அவர்களுக்குப் பின் அவர்களுடைய வாரிசுகளும் அப்பொறுப்பினை நிருவகிக்க வேண்டுமெனச் சாசனம் செய்து வைத்தார்.

1955 ஆம் ஆண்டு அன்றைய தஞ்சை மாவட்ட ஆட்சியர் திரு. **எஸ். பழனியப்பன்** இ.ஆ.ப.அவர்களின் ஆலோசனையின் படி **A.V.C.** கல்லூரி தொடங்கப்பட்டது. அன்று முதல் நம் கல்லூரி ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி, இன்று **A.V.C.** கல்லூரி, **A.V.C.** தொழில்நுட்பக் கல்லூரி, **A.V.C.** பொறியியல் கல்லூரி என வளர்ந்து மிகப்பெரிய கல்வி நிறுவனங்களாக விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இந்த ஐந்து குடும்ப உறுப்பினர்களும் (பல்லவராயன் பேட்டை, ஏனாதிமங்கலம், காருகுடி, அன்பனாதபுரம் மற்றும் கங்கனம்புத்தூர்) இதுநாள் வரை ஏ.வி.சி கல்வி நிறுவனங்களைச் சீரிய முறையில் திறம்பட நடத்தி வருகிறார்கள்.

கல்விப்பணி மட்டுமன்றிச் சமுதாயப்பணிகளிலும் மாணவர்களின் ஈடுபாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் இக் கல்லூரியில் **பீக்காக்** என்னும் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. ஐந்து குடும்பங்களின் ஊர்ப்பெயரிலேயே இப்பெயர் **பீக்காக் (PEKAK)** என்று அமைந்துள்ளது.



## பீக்காக் விரிவாக்கப்பணி
## PEKAK EXTENSION PROGRAMME

**முன்னுரை :-**

இச்சமுதாயத்தில் சமத்துவத்தையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்துவதே நமது இந்தியக்குடியாட்சியின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்தை நமது கல்வி நிறுவனம் வழியாகச் செயல்படுத்தி நிறைவேற்ற நமது கல்லூரி நிருவாகம் முடிவெடுத்துள்ளது.

இதன் அடிப்படையில் நமது அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக்கல்லூரியில் புதியதொரு கல்வி விரிவாக்கத் திட்டத்தை செயல்படுத்திச் செய்து வருகின்றோம். இத்திட்டத்தின் பெயர் பீக்காக் விரிவாக்கப்பணி என்பதாகும். இதனை ஆங்கிலத்தில் PEKAK EXTENSION PROGRAMME (PEP) – என்று கூறலாம். பல்கலைக்கழக வரலாற்றில் இஃது ஒரு புதிய முயற்சியாகும். 2001-2002 கல்வி ஆண்டு முதல் தொடங்கப்பட்ட இத்திட்டம் ஒரு மாபெரும் கிராம வளர்ச்சித்திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வியானது வெறும் ஏட்டுப்படிப்பாக மட்டுமன்றிச் சமுதாயத்தில் ஏழை எளியோரை மேம்படுத்த வேண்டும் என்பதாகும். ஏற்றத்தாழ்வு மிகுந்துள்ள இந்தச் சமூகத்தில் பொருளுடைமையிலும், அதிகாரத்திலும் மக்களிடம் சமத்துவத்தை ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டும். இந்தப் பரந்துபட்ட குறிக்கோளை மாணவர்களுக்கு எடுத்துரைத்து அவர்கள் நீதியும், சமத்துவமும், மனிதநேயமும் நிறைந்த சமுதாயம் படைக்கத் தேவையான சமுதாய முன்னேற்றப்பணிகளில் ஈடுபட நல்லதொரு வாய்ப்பை இத்திட்டம் வழங்குகிறது. பெரும்பாலான மக்களின் முன்னேற்றத்திற்காகப் பணி செய்யும் பட்டறிவுடன் மாணவர்கள் சமூக அக்கறை படைத்தவர்களாகவும், மனிதநேயம் மிக்கவர்களாகவும் மாற வழிவகை செய்ய முடியும் என இத்திட்டம் உணர்த்துகிறது.

## திட்டத்தின் நோக்கங்கள் :-

கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களின் முன்னேற்றத்திற்குத் தேவைப்படும் பல்வேறு பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவது இத்திட்டத்தின் முதன்மை நோக்கங்களில் ஒன்றாகும். நமது நாட்டில் 80 விழுக்காடு மக்கள் கிராமங்களில் வாழ்கிறார்கள். கிராமப்பகுதிகளில் உழைக்கும் ஏழை எளிய மக்கள் சமூக அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளில் மிகவும் பின்தங்கியுள்ளனர். கிராமங்களில் குடிநீர், சாலை, மின்சாரம், பேருந்துப்போக்குவரத்து, கல்வி, மருத்துவம், தகவல் தொடர்பு போன்ற வசதிகள் அரிதாகவே உள்ளன. ஆனால் கிராம மக்கள் தாம் அயராது பாடுபட்டு உணவுப்பொருட்களை உற்பத்தி செய்து அனைவரையும் வாழவைக்கின்றார்கள். இருப்பினும் வசதி வாய்ப்புகள் நகரங்களில் மட்டுமே ஏராளமாகக் குவிந்து கிடக்கின்றன. உயர்கல்வி நிறுவனங்களும், சிறப்பு வசதிகளுடைய மருத்துவமனைகளும் நகரங்களில்தான் அமைந்திருக்கின்றன.

கிராமப்புறத்திலிருந்து கல்வி நிலையில் முன்னேறிய மாணவர்கள் நகரங்களிலேயே தங்கி விடுகின்றனர். பல்வேறு துறைகளிலும் பின்தங்கிய கிராமங்களுக்குச்சென்று மக்களோடு கலந்துரையாடி அவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாகச் செயல்படுதல் பொது மக்களின் தேவைகளை அறிந்து கொண்டு அதற்கான ஆலோசனைகளை வழங்குதல், தேவைகளின் தன்மைக்கேற்ப அணுக வேண்டிய அரசு அலுவலகங்கள் மற்றும் சேவை அமைப்புகள் குறித்துக் கிராம மக்களுக்கு வழிகாட்டுதல் போன்றவை மாணவர்களின் தலையாயப் பணிகளாகும்.

கிராம மக்களின் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்வதில், மாணவர்கள் தங்களின் திறமைகள் மூலமும், கல்லூரியின் துணைகொண்டும் (Lab, Research Centres, Library, Resource Person) பொது மக்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதைத் திட்டமிடுதலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.



படிக்கும் மாணவ-மாணவிகளுக்குக் கிராமங்கள், கிராம மக்களின் சூழ்நிலை பற்றிய தெளிவான புரிதல் ஏற்படுத்த வேண்டி இருப்பதால் கிராம மக்கள் மீது அக்கறை செலுத்தி, வருங்காலத்தில் தாங்கள் பொறுப்பேற்கும் அனைத்துத்துறைகளிலும் கிராம மக்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்யும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கங்களில் அடங்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாகச் சமூக சேவை என்பது பொழுதுபோக்கு என்று கருதாமல் எளிய மக்கள் வரிப்பணத்தில் உயர்கல்வி கற்கும் வாய்ப்புப் பெற்ற ஒவ்வொருவரின் கடமை என்பதையும், கலை, அறிவியல் ஆகியவற்றின் பயனைக் கிராமங்களுக்கு எடுத்துச்செல்வதே உயர்கல்வியின் பயன் என்பதையும், மாணவர் சமுதாயத்திற்கு உணர்த்துவதும் இத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

வகுப்பறைக் கல்வியைக் கிராமங்களுக்குச் சென்று மாணாக்கர் செயல்படுத்துவதும், அதற்கேற்ப கல்வித்திட்டங்களிலும், பாடத்திட்டங்களிலும் மாற்றங்கள் கொண்டு வரவேண்டியத் தேவையை உணரச்செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு துறையிலும் தான் படித்ததை எவ்வாறு செயல்படுத்துவது? அதன் மூலம் கிராம மக்களுக்கும், நமது நாட்டுக்கும் எவ்வாறு உதவிடமுடியும்? போன்ற வினாக்களுக்கு விடைதேடும் வகையில் ஆராய்ந்து திட்டங்களைத் தீட்டவும், அதனைச் செயல்படுத்தவும், கிராம மக்களையும், கல்லூரியில் உள்ள வசதிகளையும் கட்டடங்களையும் பயன்படுத்திப் பேராசிரியர்களின் ஒத்துழைப்போடு மக்களை முன்னேற்றச்செய்ய இத்திட்டம் விழைகிறது.

இத்திட்டத்தின் மூலம் கிராம மக்கள் தங்களின் உரிமைகளைப் பற்றி அறியவும், கலந்தாலோசிக்கவும் உரிமைகளைக் கேட்டுப்பெறவும் போதுமான விழிப்புணர்வுப் பெறவும் வழி வகை செய்கிறது.

## இத்திட்டத்தில் ஈடுபடுவதன் மூலம் மாணவர்கள் பெறும் பயன்கள் :-

1. இத்திட்டத்தில் ஈடுபடுவதன் மூலம் மாணவ-மாணவிகளுக்குத் தான் மற்றும் தனது குடும்பம் என்ற சுயநலச்சிந்தனையும், நகர வாழ்வின் வசதிகளில் நிறைவு பெறுதல் என்ற மனப்போக்கும் மாறும் வாய்ப்பு உள்ளது.

2. உயர் கல்வி பெறுவதோடு ஏழை மக்களுக்கு உதவும் உயர்ந்த எண்ணமும் உருவாகும்.

3. மக்கள் மேம்பாட்டுக்கான பணிகளைத் திறம்படச் செய்திடவும், அவர்களின் திறமைகளை வெளிக்கொணரவும், வளர்க்கவும் முடிகிறது.

4. கலந்து ஆலோசித்தல் (Group Discussion), குழுவாகத் திட்டங்கள் தீட்டுதல் (Project Excution), அதனைச் செயல்படுத்துதல் (Implementation) போன்ற உயரிய பண்புகள் உருவாக்கப் படுகின்றன. இவற்றின் மூலம் ஒவ்வொருவரும் மாணவப் பருவத்திலிருந்தே மக்கள் நலனில் அக்கறை கொண்ட நல்ல குடிமகனாக வாழ இத்திட்டம் வழி வகுக்கிறது.

**பீக்காக் விரிவாக்கத்திட்டத்தின் செயல்முறை :-**

இக்கல்லூரியின் பகல் நேரப்பிரிவில் பயிலும் 10 துறைகளைச்சார்ந்த இளநிலை முதலாம் ஆண்டு மாணவர்களை 10 பிரிவுகளாகவும், மாலைநேரக்கல்லூரியில் முதலாம் ஆண்டு இளநிலையைச் சேர்ந்த மாணவர்களை 18 பிரிவுகளாகவும் பிரித்து இந்த 28 பிரிவுகளுக்கும் இந்த 14 கிராமங்களைத் தத்து எடுத்துக்கொள்வது. இக்கிராமங்களுக்கு மாணவர்கள் அந்தக்கல்வி ஆண்டு முழுவதும் சென்று அக்கிராம மக்கள் முன்னேற்றுவதற்கு முயற்சி மேற்கொள்வார்கள். மாலை நேரக்கல்லூரியைச்சேர்ந்த முதலாம் ஆண்டு இளநிலை மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து 14 கிராமங்களிலும் மகளிர் மேம்பாடு, சுற்றுப்புறச்சூழ்நிலை, சுகாதாரம், குழந்தை வளர்ப்பு, வருமுன்காப்பு, குடும்பக்கட்டுப்பாடு போன்ற துறைகளில் ஆலோசனை வழங்குவார்கள். இக்குழுவினர் தாம் செல்லும் அனைத்து கிராமங்களிலும் ஒரு செயல்பாட்டாளராக இருந்து கிராம மேம்பாட்டுத் திட்டங்களைக் கொண்டு சேர்ப்பதற்குப் பேருதவி புரிவர்.



**இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள 14 கிராமங்களும் பின்வருமாறு :-**

பல்லவராயன்பேட்டை, சித்தர்க்காடு, மல்லியம், சேந்தங்குடி, பொன்னூர், மாப்படுகை, செறுதியூர், சோழம்பேட்டை, திருமங்கலம், மூவலூர், திருவிழந்தூர், ஆறுபாதி, மணக்குடி, பாலாகுடி.

**ஒருங்கிணைப்பாளர் :-**

இத்திட்டம் 2001-2002 ஆம் கல்வியாண்டு முதல் இக்கல்லூரியில் இளநிலைப் பட்டப்படிப்பில் சேரும் அனைத்து முதலாமாண்டு மாணவ - மாணவியருக்கும் கட்டாயமாகும். ஒவ்வொரு துறையிலிருந்தும் ஒரு பேராசிரியர் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுவர். மேலும், மேலே கூறிய 14 கிராமங்களிலிருந்தும் கிராமத்திற்கு ஒரு பொதுநபர் கிராம ஒருங்கிணைப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். இக்கிராம ஒருங்கிணைப்பாளர் தத்தம் கிராமத்தைப் பற்றியும் அதன் தேவைகளைப் பற்றியும், மக்கள் நிலை பற்றியும், அக்கிராமத்திற்குரிய கல்லூரியின் ஒருங்கிணைப்பாளருடன் கலந்தாலோசித்துத் திட்டங்களைத் தீட்டி, அத்திட்டங்களை மாணவர்கள் உதவியுடன் செயல்படுத்துவார்.

**பணிப்பகிர்வு :-**

இத்திட்டம் ஓர் ஆண்டு முழுவதும் செயல்படுத்தவேண்டிய ஒரு தொடர் திட்டமாகும். ஒவ்வொரு மாணவரும் இத்திட்டத்திற்காக ஓர் ஆண்டிற்கு 40 மணி நேரம் பணிபுரிய வேண்டும். இத்திட்டத்தின் 40 மணி நேரப்பணியை இரண்டு பிரிவுகளாகப்பிரித்து ஒரு பிரிவில் 10 மணி நேரப்பணியைக் கல்லூரி வளாக முன்னேற்றத்திற்கும், தான் பயிலும் கல்லூரியின் சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்துவார்கள். மற்றொரு பகுதியான 30 மணி நேரத்தைத் தமக்கு அளிக்கப்பட்ட கிராமங்களில் பணிபுரிவார்கள். இந்தப்பணியைப் பற்றி முதல் இரண்டு மணி நேரங்கள் கல்லூரி வகுப்பறையிலேயே புரிந்து கொள்ளவும், கிராமத்தைப் பற்றி அறிந்துகொள்ளவும், திட்டத்தின் கிராம ஒருங்கிணைப்பாளரைத் தெரிந்து கொள்ளவும் செலவிடப்படுகின்றன. மீதமுள்ள 28 மணி நேரப்பணியைக் கிராமங்களுக்கு நான்கு முறை சென்றுவர ஒரு முறைக்கு 3 மணி நேரம் என்ற முறையில் 12 மணி நேரம்

ஒதுக்கப்படுகிறது. முதல் முறையாகச் செல்லும்போது பணி தொடங்குவதைப்பற்றிய புரிதலுக்கும், கிராமத்தைப் பற்றி அறிவதற்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது. 2-ஆம் முறையாக மாணவ-மாணவியர் கிராமத்திற்குச் செல்வது என்பது அக்கிராமத்தில் ஒரு நாள் முகாம் அமைத்து, அம்முகாமில் அக்கிராமத்தில் செயல்படுத்திய திட்டங்கள், நன்மைகள், பயன்கள் சரியாகச் சென்றடைகின்றனவா? குறை ஏதுமிருந்தால் அதைத் தெரிந்து கொள்ளும் முகமாகப் பயன்படுத்தவேண்டியது. 3-ஆம் முறை, மீண்டும் இரண்டாவதாக ஒரு நாள் முகாம் நடத்திய பிறகு, அதன் முன்னேற்றத்தையும், குறைபாடுகளையும் கவனிப்பதற்காகப் பயன்படுத்த வேண்டியது. நிறைவாக 4-ஆவது முறையாகக் கிராமத்திற்குச் செல்லும்போது அந்த ஆண்டின் பணியினால் ஏற்பட்ட நிறை, குறைகளை ஆராய்ந்து, இத்திட்டத்தினால் அக்கிராமமும், மக்களும் பயன்பெறுவதற்கு உள்ள வழிகளை ஆலோசனையாகவும், கருத்தாகவும் வரும் ஆண்டுகளில் சேரும் மாணவ-மாணவியர்களுக்கு உதவியாக ஒரு குறிப்பை ஒருங்கிணைப்பாளரிடம் வழங்குவது.

**ஒரு நாள் முகாம் :-**

இத்திட்டத்தில், இரண்டு ஒரு நாள் முகாம்கள், நடத்தப்படும். ஒவ்வொரு நாளும் முகாம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை 8 மணி நேரங்களுக்கு நடைபெறும். ஒவ்வொரு மாணவரும் இம்முகாம்களில் கட்டாயமாகக் கலந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு முகாமிலும் கல்லூரி ஒருங்கிணைப்பாளரும், கிராம ஒருங்கிணைப்பாளரும் சேர்ந்து அக்கிராமத்தில் மாணவர்கள் தொடர்ந்து ஆற்றவேண்டிய பணிகளைப் பற்றிக் கிராம மக்களுக்கும், மாணவர்களுக்கும் திட்டமிட்டு அளிப்பார்கள்.

**திட்டத்தின்படி மாணவர்கள் கிராமத்தில் செய்யவேண்டிய பணிகள் :-**

மாணவர்கள் கிராமத்தில் தங்களை உரிய முறையில் கிராம மக்களுடன் அறிமுகப்படுத்திக் கொள்வது. கிராம மக்களிடையே நமது கல்லூரியைப் பற்றியும், பீக்காக் விரிவாக்கப்பணிபற்றியும்



எடுத்துக்கூறுவது. வகுப்பு மாணவர்கள் தமக்குள் 4 அல்லது 5 பேர் கொண்ட சிறு, சிறு குழுக்களாக அமைத்துக்கொண்டு அக்கிராமத்தில் உள்ள அனைத்து வீதிகளையும், வீடுகளையும் தொடர்பு கொள்வது.

அரசு நலத்திட்ட உதவிகளை அறிவித்து மக்கள் பயன்பெற உதவி செய்ய வேண்டும்.

பொது மருத்துவம் மற்றும் சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்தி மக்கள் பயன் பெற உதவி செய்தல், விழிப்புணர்வு அறிக்கை, நாடகம், திரைப்படம் வாயிலாகப் பல்வேறு நோய்கள் பற்றியும், தடுப்புமுறைகள் மற்றும் மருத்துவ முறைகள் பற்றியும் அறிவிக்க வேண்டும்.

நமது கல்லூரி மாணவர்கள், மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து கிராம வளர்ச்சிக்குப் பணியாற்ற வேண்டும்.

விவசாய மக்களுக்கு மண் பரிசோதனை, புதிய வகை விவசாயப் பயிர் வகைகள், மாற்றுச் சாகுபடி, நீர் மேலாண்மை, நீரின் தரத்தை ஆய்வு செய்தல், மிதமான உப்பு நீரில் வளரக்கூடிய விவசாயப் பயிர்களை அறிமுகப்படுத்துதல். இவற்றின் வழியாக விவசாயிகளின் பொருளாதாரம் மேம்பட உதவி செய்ய வேண்டும்.

கிராமப்புறச் சிறுவர்களின் கல்வி மற்றும் பொருளாதாரச் சூழல் உயர்வடைய ஆலோசனை வழங்கி உதவி செய்தல், சிறு தொழில் குடிசைத்தொழில், சுயதொழில் ஆகியவற்றைக் கிராமங்களில் நடைமுறைப்படுத்த வங்கி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.

கீழ்க்கண்ட செயல்பாடுகளைத் தத்தெடுத்த கிராமங்களில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இரத்தவகை மற்றும் இரத்த சோகை கண்டறியும் முகாம், கண் மற்றும் இதய மருத்துவமுகாம், கால்நடை மருத்துவமுகாம், இயற்கை மருத்துவமுகாம், மழை நீர் சேகரிப்பு மற்றும் சுற்றுச் சூழல் விழிப்புணர்வுப் பேரணி ஆகியவற்றின் வழி கல்லூரி மாணவர்கள் கிராம மக்களுடன் இணைந்து பணியாற்றி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, பெரும் உதவியாக இருக்க வேண்டும்.

கல்லூரியின் பீக்காக் அமைப்பின் மூலமாகத் தத்தெடுத்த கிராமங்களுக்கு உதவிகள் செய்வதுடன்

1. கல்வி பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
2. A.V.C. கல்லூரியின் சிறப்பினை எடுத்துரைத்தல்.
3. கிராமம் கிராமமாகச் சென்று தொழில்நுட்பப் பட்டயப் படிப்பின் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
4. பட்டம் பயின்று வேலைக்காகக் காத்திராமல் சுயதொழில் தொடங்குவது (Entrepreneurship Development) பற்றி விழிப்புணர்வு எடுத்துரைத்தல்.
5. கிராமப்புற மக்களுக்கு அறிவுசார் தொழில்நுட்பத்தை எடுத்துரைத்தல்.
6. உணவுக் கலப்படம் (Inorganic and Organic Components Mixed in Food Products) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
7. நுகர்வோர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
8. தோட்டக்கலை பற்றியும் அரசு கொடுக்கும் மானியம் பற்றித் தெரியப்படுத்துதல்.
9. இயற்கை உரம், பூச்சிக்கொல்லி மருந்து தயார் செய்வது பற்றிய முறையினை விவசாயிகளுக்குப் பயிற்றுவித்தல்.
10. நமது கல்வி நிறுவனத்தில் செயல்படும் இலவச பாட வகுப்புகள், Welder, Fitter, CCTV Installation மற்றும் Tally ஆகிய பயிற்சி வகுப்புகளைக் கிராமப் புற மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற உதவி செய்தல்.
11. மரம் வளர்ப்பதன் முக்கியத்துவத்தைக் கிராமப்புற மக்களிடம் எடுத்துரைத்தல்.
12. இயற்கை பேரிடர் மேலாண்மையைப் பற்றி எடுத்துரைத்தல்.



**கிராமத்தைப் பற்றி ஆய்ந்து அறிவது (Survey) :-**

ஒவ்வொரு வகுப்பு மாணவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கிராமத்தில் விரிவான கணக்கெடுப்புச் (Survey) செய்து அதன் மூலம் அக்கிராமத்தின் அனைத்து விவரங்களையும் தெரிந்து கொள்வது.

இக்கணக்கெடுப்பில் கீழ்க்கண்ட அம்சங்களை முக்கியமாக ஆய்ந்து அறிய மாணவர்கள் விழையவேண்டும்:

1. கிராமத்தின் மக்கள் தொகை
2. கல்வி நிலை
3. சுற்றுப்புறச்சூழ்நிலை
4. பொருளாதார நிலை
5. நில உரிமை
6. கால்நடைக்கணக்கீடு
7. சமூக, சமுதாய விவரங்கள்
8. சாலை, குடிநீர் மற்றும் கழிவு வசதிகள்
9. கல்வி மற்றும் பள்ளி வசதிகள்

இத்தகவல்களைக் கொண்டு கிராம முன்னேற்றத்திற்கு மாணவர்கள் முயற்சி செய்ய வேண்டும்.

சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்ட மாணவர்கள் கிராமத்தின் அனைத்து முன்னேற்றத்திற்கும் பாடுபட வேண்டும். மாதிரிக்குழுக்கள் சுற்றுப்புறச்சூழ்நிலைக்குழு, நோய்க்காப்பு மற்றும் சுகாதாரக்குழு, கால்நடைப்பாதுகாப்புக்குழு, முறைசாராக்கல்விக்குழு, சமுதாய மேம்பாட்டுக்குழு, அரசாங்க மற்றும் உள்ளாட்சித் தொடர்புக்குழு போன்ற ஆக்கப்பூர்வமான சிறுசிறு குழுக்களாக அமைத்துக் கிராம மக்களுக்குப் பணிசெய்வது.

அனைத்து வகுப்பு மாணவியரும் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு 14 கிராமங்களையும் தத்து எடுத்துக்கொள்வர். இந்த மாணவியர் தமக்குக் கொடுக்கப்பட்ட கிராமங்களில் அவர்களுக்குரிய பணியான மகளிர்

மேம்பாட்டுத் திட்டங்கள், குழந்தை வளர்ப்பு, நோய்த்தடுப்பு, குடும்பக்கட்டுபாடு, குழந்தைகள் கல்வி பற்றிய விழிப்புணர்வு மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக் குழுக்களாகப் பிரிந்து பணியாற்றுவர்.

**மாணவ-மாணவியர் மதிப்பீடு :-**

இத்திட்டம் 2001-2002 ஆம் கல்வி ஆண்டு முதல் கல்லூரியில் சேரும் இளநிலை மாணவ-மாணவியர்க்கு ஒரு கட்டாயப் பாடமாகும். இத்திட்டத்தைப் பூர்த்தி செய்தால் தான் இளநிலைப் பட்டத்திற்குத் தகுதி உடையவர்களாகக் கருதப்படுவார்கள். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடான 100 மதிப்பெண்கள் 4 பகுதிகளாகப் பகுக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் தலா 25 மதிப்பெண் வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. வருகை (Attendance) | 25 | மதிப்பெண் |
| 2. ஈடுபாடு (Involvement) | 25 | மதிப்பெண் |
| 3. குழுச் செயல்பாடு (Team Work) | 25 | மதிப்பெண் |
| 4. நன்னடத்தை (General Conduct) | 25 | மதிப்பெண் |
| Total | 100 | |

இத்திட்டத்தில் தேர்ச்சிபெற ஒவ்வொரு இளநிலை மாணவ-மாணவியரும் குறைந்தது 40 மதிப்பெண்கள் பெற வேண்டும். இம்மதிப்பெண் மாணவர்களின் 2-ஆம் பருவ இறுதி நாளிலும், அப்பருவ மதிப்பெண் பட்டியலிலும் சேர்க்கப்படும். அவ்வாறு தேர்ச்சி பெறாத மாணவ-மாணவியர்க்கு அடுத்த கல்வி ஆண்டில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டு தேர்ச்சி பெறுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

**வருகை :-**

1. ஒவ்வொரு மாணவருக்கும் குறைந்த அளவு 75 சதவிகிதம் வருகைப்பதிவு இருக்க வேண்டும். (மொத்தம் 40 மணி நேரத்தில் 30 மணி நேரம் பணி செய்திருக்க வேண்டும்)
2. ஒவ்வொரு மாணவ மாணவியரும் குறைந்த பட்சம் ஒருநாளாவது முகாமிற்கு வருகை புரிந்திருக்க வேண்டும்.
3. வருகைப்பதிவேட்டிற்கு 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.



**ஈடுபாடு :-**

மாணவ-மாணவியர்க்கு இத்திட்டத்தில் இருக்கும் ஈடுபாட்டினை அறிந்து அதற்கேற்ப இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் மேல் அளவாக 25 மதிப்பெண்களை ஒவ்வொரு மாணவருக்கும் வழங்குவார்.

**குழுச் செயல்பாடு :-**

தனது குழுவிற்காக விட்டுக்கொடுக்கும் தன்மையையும், அனுசரிக்கும் தன்மையையும், தலைமைப்பண்பையும் வைத்து ஒருங்கிணைப்பாளர் ஒவ்வொரு மாணவருக்கும் மேல் அளவு 25 மதிப்பெண்கள் வழங்குவார்.

**நன்னடத்தை :-**

மாணவ-மாணவியரின் நடத்தையைப் (தமக்குள்ளும்/கிராம மக்களிடமும்) பொறுத்து ஒருங்கிணைப்பாளர் இம்மாணவருக்கு மேல் அளவாக 25 மதிப்பெண்கள் வழங்குவார்.

இந்த நான்கு பிரிவுகளில் கூடுதலாக ஒவ்வொரு மாணவ-மாணவியரும் 40 விழுக்காடு மதிப்பெண் பெறவேண்டும். மேலும் 75 விழுக்காடு வருகை என்பது மிகவும் கட்டாயமாகும்.

## மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்



## STUDENT REPORT SHEET

Name of the student : ________ Roll no. ________ Name of the village visited ________

| S.No. | Date of visit | Time of visit | Time spent in the village | Work done at village | Things learnt and observed | Signature of the student | Signature of the staff in-charge |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |



## ATTENDANCE DETAILS

| Date of visit | Hours attended |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| Total no. of Hrs. attended | |

Total no. of hours for the scheme. **40**

Total no. of hours attended. ----

Percentage of attendance. ----

**MARKS FOR ATTENDANCE**

0% to 74% - 0 Marks

75% - 13 Marks

76% to 80% - 15 Marks

81% to 85% - 18 Marks

86% to 90% - 20 Marks

91% to 100% - 25 Marks

**MARKS DETAILS**

| | |
|---|---|
| Attendance | /25 |
| Involvement | /25 |
| Team Work | /25 |
| General Conduct | /25 |
| Total Marks | /100 |

## A.V.C. பாலிடெக்னிக் கல்லூரி

(Approved by AICTE, New Delhi; Affiliated to DOTE, Chennai)
(AN ISO 9001 : 2015 Certified Institution)

**மன்னம்பந்தல், மயிலாடுதுறை - 609 305.**

Phone : 04364 - 222202, Fax : 04364 - 243332

| | | |
|---|---|---|
| DCE | - | சிவில் இன்ஜினியரிங் (CIVIL) |
| DME | - | மெக்கானிக்கல் இன்ஜினியரிங் (MECHANICAL) |
| DEEE | - | எலக்ட்ரிக்கல் & எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் (EEE) |
| DECE | - | எலக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன் இன்ஜினியரிங்(ECE) |
| DCSE | - | கம்ப்யூட்டர் சயின்ஸ் இன்ஜினியரிங் (CSE) |
| DIT | - | இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி (IT) |

### கல்வித் தகுதி

முதலாம் ஆண்டு 10-ம் வகுப்பு தேர்ச்சி
இரண்டாம் ஆண்டு 12-ம் வகுப்பு தேர்ச்சி
(HSC Academic / HSC Vocational)
மற்றும் பத்தாம் வகுப்பு முடித்து இரண்டு ஆண்டு ITI படித்தவர்கள்

### இக்கல்லூரியின் சிறப்பம்சங்கள்

- மாணவ / மாணவியருக்குத் தனித்தனி தங்கும் விடுதிகள்
- மாலை 6.00 மணி வரை நூலகம் மற்றும் 50 Mbps அதிவேக இன்டர்நெட் வசதி
- பயிற்சி மறறும் வேலை வாய்ப்பு வசதி (Training & Placement Cell)
- அனுபவமிக்க ஆசிரியர்கள்
- மேம்படுத்தப்பட்ட ஆய்வகங்கள்
- கனடா - இந்தியா கூட்டுப்பயிலகத் திட்டத்தில் சிறப்பு பயிற்சி வகுப்புகள்
- மாணவர்களின் ஆளுமைப பண்பை வளர்க்க பல்வேறு மாணவ மன்றங்கள் (Rotaract Club, Personslity Development Club, YRC, NSS மற்றும் RRC)
- கும்பகோணம், ஆடுதுறை, சிதம்பரம், சீர்காழி, மணல்மேடு, திருவெண்காடு, திருப்பனந்தாள், காளி, பூம்புகார், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய ஊர்களில் இருந்து பேருந்து வசதி



## A.V.C. COLLEGE OF ENGINEERING

(Approved by AICTE - New Delhi Affiliated to Anna Universtiy - Chennai)
(Accredited by NAAC An ISO 9001 : 2015 Certified Institution)

**MANNAMPANDAL, MAYILADUTHURAI - 609 305**

Phone : 04364 - 227 202, 224 202, Fax : 04364 - 227 299
Email : avcce@avccengg.net, Website:www.avccengg.net

### COURSES OFFERED

### UG COURSES

**First Year / Lateral Entry**

| | | |
|---|---|---|
| **B.E.** | - | Civil Engineering |
| **B.E.** | - | Mechanical Engineering |
| **B.E.** | - | Electronics and Communication Engineering |
| **B.E.** | - | Electrical and Electronics Engineering |
| **B.E.** | - | Computer Science and Engineering |
| **B.E.** | - | Instrumentation and Control Engineering |
| **B.Tech.** | - | Information Technology |

### PG COURSES

| | | |
|---|---|---|
| **M.E.** | - | Energy Engineering |
| **M.E.** | - | Applied Electronics |
| **M.E.** | - | Computer Science and Engineering |
| **M.B.A.** | - | Master of Business Administration |
| **M.C.A.** | - | Master of Computer Applications (First Year / Lateral Entry) |

**Research Programmes**

M.S. (By research) / Ph.D. in the Departments of
Mechanical Engineering,
Computer Applications & Chemistry

**PMKVY Technical Institute Courses**

Junior Software Developer, Front Office Management,
Trainee Associate, CCTV Installation
Mass ion Concrete, Fitter and Modeling

Evergreen Campus, Experienced Faculty Members, Internet and Wi-Fi Enabled Campus, Indoor and Outdoor Sports Facilities, Digital Library, Well Equipped Laboratories, College Bus Facility covering all Routes, Separate Hostel for Boys & Girls, IIT Bombay - Spoken Tutorial, Scholarships, MOU with Industries, Training for Competitive Exams, Various Club Activities for Students